1968 மார்ச் 4]

திரு. செ. பாலசுப்பிரமணியம் : மேச்சேரி இன ஆடுகளை விருத்தி செய்ய கடாக்கள் மேச்சேரி பகுதியிலேயே வாங்கிக் கொடுக்கிறுர்கள். அங்கே போதுமான கடாக்கள் கிடைப்பதில்லை. கோவை போன்ற இடங்களிலும் அந்தக் கடாக்கள் கிடைப்பதினுல் அங்கிருந்து வாங்கி அளிக்க சர்க்கார் அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல் கடாக்களுக்குப் பஞ்சம் இல்லை. சேலம் மாவட்ட பகுதியிலும், சின்னச்சேலம் பகுதியிலும் கிடைக்கின்றன.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் திட்டம் நல்லமுறையில் செயல்படுகிறதா ? அதை விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நீலகிரி மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் திட்டம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. நானே நேரில் பார்த்து வந்து சொல்கிறேன். அங்கே மிக நேர்த்தியான முறையில் கண்காணிப்போடு வளர்க்கப்பட்டு வருகின்றன.

Award for inter-caste marriages

***134 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state the number of inter-caste marriages reported to the Government for the purpose of award of gold medal in July and August 1967 ?**

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசினர் கவனத்திற்கு ஒரு மனுவும் கொண்டு வரப்படவில்லை.

திரு. கே. விநயகம் : அப்படி கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் அரசாங்கத்திற்குத் தங்கப்பதக்கம் கொடுக்க வேண்டுமென்று மனுப் போட வேண்டுமா ? அல்லது அரசாங்கத்தில் இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரத்தைக் கொண்டே யார் யார் கலப்புத் திருமணம் செய்து கொண்டிருக்கிறுர்கள் என்று பார்த்து தங்கப் பதக்கம் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று அரசாங்கம் விளம்பரம் செய்திருக்கிறது. ஆகவே, தங்கப்பதக்கத்தைப் பெறுவதற்கு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களே விண்ணப்பம் போடவேண்டும்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : பதிவு செய்துகொண்ட கலப்புத் திருமணங்களுக்குக்குத்தான் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறதா ? பதிவு செய்து கொள்ளாமல் தலைவர்கள் தலைமையில் நடைபெறுகிற கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கும் பதக்கம் வழங்கப்படுமா ? அவர்களுக்கு உத்தியோகச் சலுகை, இலவசப்படிப்பு ஆகியவை உடனடியாக அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படுகிற கேள்வி. உத்தியோகச் சலுகையோ, படிப்புச் சலுகையோ கொடுக்கிற கேள்வி அல்ல. கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்கள் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டாலும் இந்தப் பதக்கம் பெற உரிமையுள்ளவர்களாவார்கள்.

DR. H. V. HANDE : Will the Hon. Minister give any reward for those who have had intercaste marriage earlier, that is, give the award with retrospective effect ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிக் கொடுப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த ஒரு ஆண்டில் எத்தனை கலப்புத் திருமணங்கள் நடந்திருக்கின்றன என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தத் திட்டம் வெளியான தேதியில் இருந்து இதுவரை சர்க்கார் கவனத்திற்கு தங்கப் பதக்கம் கோரி 60 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.

ஹாஜி ம. மு. பிர். முகம்மது : சமயங்கள் மாறி கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்களுக்கும் தங்கப் பதக்கம் தருகிற திட்டம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதுவும் கலப்புத் திருமணம்தான். எந்த எந்த வகையில் எப்படி எப்படி கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு பரிசுகள் தரப்படும் என்கிற முழுத் திட்டம் இன்னமும் உருவாக்கப்படவில்லை.

மு ப 6-30-

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திருச்சி ஜில்லாவில் இம்மாதிரியான கலப்புத் திருமணங்கள் எவ்வளவு நடந்திருக்கின்றன என்று கூற முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஜில்லாவாரியாகத் தகவல் இல்லை. மாதவாரியாகத்தான் தகவல் இருக்கிறது. மேலும் தகவல்கள் தேவையென்றால் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இரண்டாவது முறையாக கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்கும் பதக்கம் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா ? யாருக்காவது வழங்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இரண்டாவது திருமணம் செய்துகொள்வது சட்டப்படி விரோதம். கனம் அங்கத்தினர் அவர்கள் தவறிச் சொல்லிவிட்டார்கள். யார் அப்படிச் செய்து இருக்கிறார் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கலப்புத் திருமணம் என்று சொன்னால் ஹிந்துக்களுக்குள்ளேயே ஏற்படக்கூடியவைதான் கலப்புத் திருமணம் என்பதோடு உயர்ந்த ஜாதிகளுக்கும் தாழ்ந்த ஜாதிகளுக்கும் இடையே ஏற்படுகின்றவற்றைக் கலப்புத் திருமணம் என்பதா ? எந்தத் திருமணம் கலப்புத் திருமணம் என்று சொல்லுவார்களா ? அவர்களுக்குத் தங்கப் பதக்கம் எவ்வளவு மதிப்புடைய பதக்கம் வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஜாதிகளுக்கும், மதங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை நீக்க வேண்டுமென்ற முறையிலேதான் அந்த வேறுபாடுகளை நீக்குவதற்காக அதற்கு ஊக்கமும் ஆக்கமும் தருவதற்காக அந்த அடிப்படையிலே எந்த ஜாதிக்கும் எந்த மதத்திற்கும் தரப்படும். எவ்வவளவு பெறுமானமுள்ள பதக்கம் தரப்படும் என்பது இன்னும் முடிவாகவில்லை.

திரு. கரு. சீமைச்சாமி : சமீபத்திலே மதுரையிலே கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் மாநாடு நடந்தது, அதிலேயிருந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அந்தத் தகவல் சர்க்காருக்கு வரவில்லை.

திரு. எஸ். முருகையன் : ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களை மணந்து கொள்கிறவர்களுக்கு அதிகப்படியாக மதிப்புள்ள பெரிய பதக்கம் வழங்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

1968 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பெரிய பதக்கம் சிறிய பதக்கம் என்று இல்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான பதக்கம் தான் வழங்கப்படும்.

திரு. கே. விநாயகம் : அப்படி 60 மனுக்கள் வந்திருக்கின்றனவே, அவற்றைப் பரிசீலித்துப் பதக்கம் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டனவா ? அப்படி ஏதாகிலும் கொடுக்கபட்டிருந்தால் அதற்கு என்ன செலவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மனுக்கள், பதக்கம் வழங்கப்படும் என்று அறிவித்ததற்கு முன்னாலே திருமணம் செய்துகொண்டவர்களிடமிருந்தும், பிறகு திருமணம் செய்துகொண்டவர்களிடமிருந்தும் வந்து இருக்கின்றன. எந்தத் தேதியிலே திருமணம் செய்து கொண்டார்கள் என்ற விவரங்கள் இல்லாமலும் வந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு முடிவு எடுக்கப் படும்.

திரு. ரா. ராமச்சந்திரதுரை : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் கொடுப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. கூடுமான வரையில் கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்கள் இருதரப்பிலுமே பாதிக்கப்படுகிறார்கள். வாழ்க்கை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தியாகிகளுக்கு ஐந்து ஏக்கர் நிலம் கொடுப்பதைப் போல் கலப்புத் திருமணங்கள் செய்து கொள்கிறவர்களுக்கும் அம்மாதிரியான ஒரு திட்டத்தை உருவாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது தங்கப் பதக்கம் தரப்படுகின்ற முறையைப்பற்றிய கேள்வியாகும். கலப்புத் திருமணம் இன்றைக்கு வசதியானவர்கள் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு ஐந்து எக்கர் தரவேண்டுமென்று அவசியமில்லையென்று கருதுகிறேன்.

திரு. முனு ஆதி : கலப்புத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்கு பதக்கம் வழங்கப்படுகின்ற விஷயம் தெரியாமல் பலர் மனுப்போடாமல் இருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது போட்டால் பதக்கம் தரப்படுமா ? அவர்கள் மனுப்போடும்பொழுது தாசில்தார், வி. எம். இவர்களிடமிருந்து சர்ட்டிபிகேட்வாங்கி இணைத்து அனுப்பவேண்டுமா அல்லது வெறும் மனுப்போட்டால் போதுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தங்கள் சமூகத்தைப்பற்றி அதற்குரிய சிபாரிசுடன் அவர்கள் அனுப்பினால் அது சாலச் சிறந்ததாக இருக்கும். ஜாதி மத வேறுபாடுகள் அற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டுமென்பதில் அக்கறைகொண்டுள்ள நாம் அனைவரும் அதைப்பற்றி தகுந்த முறையில் பிரச்சாரம் செய்தால் நல்ல முறையில் இது நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. மகாதேவன் : கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு மாநிலத்தில் உள்ள அத்தனை கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் ஒரே நாளில் பாராட்டி பதக்கம் கொடுக்கப் படுமா ? அல்லது தனித்தனியாகக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்னும் சரியாக அதுபற்றி பரிசீலிக்கவில்லை. கூடுமானவரையில் மாவட்ட ரீதியிலேதான் கொடுக்கப்படும் என்று கருதுகிறேன்.

திரு. எம். எஸ். மணி : கலப்புத் திருமணங்களைவிட விதவைத் திருமணங்கள் செய்து கொள்கிறவர்களுக்கு ஸ்பெஷலாக பதக்கம் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை. இனி இதைப்பற்றி ஆலோசிக்கலாம்,

திரு. வ. ஜார்ஜ் : கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்று கடந்த பட்ஜெட் நேரத்திலே அறிவிக்கப்பட்டும். இதுவரையில் அதற்காக விதிமுறைகள் அமைக்கப்படவில்லை. ஆகவே, விதிமுறைகளை அமைத்து பரிசீலித்து பதக்கம் கொடுப்பது, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் வாழ்க்கைக் காலத்தில் கொடுக்கமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : According to Rule 31, ironical questions are not allowed.

அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், அவர்களுடைய வாழ்க்கைக் காலத்திற்குள்ளாக, இறந்து போவதற்கு முன்னால் கொடுப்பதற்கு முடியுமா என்று குத்தலாகக் கேட்கிறார்கள். நம்முடைய பேரவையின் விதி 31-ன்படி அப்படிக் கேட்கக் கூடாது.

திரு. வ. ஜார்ஜ் : கடந்த பட்ஜெட் நேரத்திலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் இன்னும் விதிமுறைகளே இயற்றப்படாத நிலையில் விதிமுறைகளை இயற்றி அவற்றைப் பரிசீலித்துக் கொடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது அதிகக் காலதாமதம் ஆகிவிட்டாலும் பிறந்த குழந்தைகளுக்கு அவர்கள் அந்தப் பதக்கத்தைப் பூட்டி மகிழலாம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : கலப்புத் திருமணங்களைச் செய்து வைக்கும் தலைவர்களுக்கும் பதக்கம் வழங்கப்படுமா ? ஏனெனில் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு ஆபத்துக்குள்ளாகாமல் அவர்கள் நடத்தி வைக்கிறார்கள்.

(விடை இல்லை)

திரு. பி. ஜி. கருத்திருமன் : குழந்தைகள் பிறக்காமல் இருக்குமானால் அவர்களுக்குத் தங்கப் பதக்கம் கிடைக்காதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பதக்கம் குழந்தைகளுக்கு அல்ல, தம்பதிகளுக்குத்தான்.

திரு. மு. ச. சிவசாமி: தலைவர் அவர்களே, தங்கப் பதக்கம் கொடுக்கப்படும் என்று தெரியப்படுத்தியதற்குப் பின்பும்கூட கலப்புத் திருமணங்கள் வேகமாகப் பெருகவில்லை. அதேநேரத்தில் நாட்டில் ஜாதிப் பித்துகள் அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. இவற்றைத் தடுப்பதற்குக் கலப்புத் திருமணத்தைக் கட்டாயச் சட்டமாகக் கொண்டுவர சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை இல்லை.

திரு. டி. மார்டின் : கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பதக்கம் வழங்கப்படுவதில் எந்த எந்த ஜாதி உயர்ந்த ஜாதி, எந்த எந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்று வரையறுக்கப்பட்டுள்ளதா ? மேலும் கிறிஸ்துவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் எந்த எந்த ஜாதி உயர்ந்த ஜாதி, எந்த எந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்று. உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ன என்ன என்று வகுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.